**செய்தி வெளியீடு எண்: 596** **நாள்: 09.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.10.2012) தலைமைச் செயலகத்தில், 3 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள திருநெல்வேலி மாநகர காவல் ஆணையரக அலுவலகக் கட்டடத்தையும், திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தில் 75 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் 85 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1036 காவலர் குடியிருப்புகள், 29 காவல் நிலையங்கள், 4 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் 9 இதர காவல்துறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தில் அமைதியான சூழ்நிலை நிலவுவதை உறுதி செய்வதில் காவல்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து காவல் நிலையங்களும், சொந்தக் கட்டடங்களில் இயங்கச் செய்யும் வகையில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்றும், காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களின் அருகிலேயே குடியிருப்புகள் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

அதன்படி, அரியலூர் மாவட்டம் – திருமானூர் மற்றும் வெங்கனூர்; சென்னை மாவட்டம் – வண்ணாரப்பேட்டை; கடலூர் மாவட்டம் – பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி மற்றும் குமாரட்சி; திண்டுக்கல் மாவட்டம் – வடமதுரை; ஈரோடு மாவட்டம் – ஈரோடு தாலுக்கா மற்றும் சென்னிமலை; காஞ்சிபுரம் மாவட்டம் – மதுராந்தகம்; கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி தாலுக்கா; நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் நகரம்; சேலம் மாவட்டம் – மேட்டூர் தாலுக்கா; தஞ்சாவூர் மாவட்டம் – பூதலூர்; தேனி மாவட்டம் – கோம்பை; திருவண்ணாமலை மாவட்டம் – பொன்னூர் மற்றும் வெறையூர்; தூத்துக்குடி மாவட்டம் – தாளமுத்து நகர்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணச்சநல்லூர்; திருநெல்வேலி மாவட்டம் – ஏர்வாடி, சுரண்டை மற்றும் பாப்பாக்குடி; வேலூர் மாவட்டம் – வேலூர் தாலுக்கா (கனியம்பாடி), விரிஞ்சிபுரம், திருப்பத்தூர் நகரம் மற்றும் நாட்றாம்பள்ளி; விழுப்புரம் மாவட்டம் – கண்டாச்சிபுரம்; விருதுநகர் மாவட்டம் – அம்மாபட்டி ஆகிய 29 இடங்களில் 10 கோடியே 96 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய காவல் நிலையக் கட்டடங்கள்;

திண்டுக்கல் மாவட்டம் – வடமதுரை; வேலூர் மாவட்டம் – அரக்கோணம்; விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை மற்றும் சிவகாசி ஆகிய 4 இடங்களில் 1 கோடியே 5 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடங்கள்;

அரியலூர் மாவட்டம் – ஆண்டிமடத்தில் 27 குடியிருப்புகள்; கோயம்புத்தூர் மாவட்டம் – மேட்டுப்பாளையத்தில் 40 குடியிருப்புகள்; சென்னை மாவட்டம் – ராயப்பேட்டையில் 4 குடியிருப்புகள் மற்றும் வேளச்சேரியில் 8 குடியிருப்புகள்; திண்டுக்கல் மாவட்டம் – பழனி தமிழ்நாடு சிறப்பு காவல் 14ஆம் அணியினருக்கு 108 குடியிருப்புகள் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் 65 குடியிருப்புகள்; காஞ்சிபுரம் மாவட்டம் – செங்கல்பட்டில் 1 குடியிருப்பு மற்றும் மாமல்லபுரத்தில் 1 குடியிருப்பு; கன்னியாகுமரி மாவட்டம் – பூதப்பாண்டியில் 24 குடியிருப்புகள்; கரூர் மாவட்டம் – சிந்தாமணிப்பட்டியில் 11 குடியிருப்புகள் மற்றும் கே. பரமத்தியில் 12 குடியிருப்புகள்; கிருஷ்ணகிரி மாவட்டம் – போச்சம்பள்ளியில் 21 குடியிருப்புகள், போச்சம்பள்ளி தமிழ்நாடு சிறப்பு காவல் 7ஆம் அணியினருக்கு 27 குடியிருப்புகள் மற்றும் பரூர் போச்சம்பள்ளியில் 12 குடியிருப்புகள்; மதுரை மாவட்டம் – மதுரை ஆயுதப்படையினருக்கு 130 குடியிருப்புகள் மற்றும் சப்தூரில் 1 குடியிருப்பு; நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டையில் 19 குடியிருப்புகள் மற்றும் மல்லசமுத்திரத்தில் 11 குடியிருப்புகள்; நீலகிரி மாவட்டம் – காந்தலில் 8 குடியிருப்புகள் மற்றும் ஜெயில் ஹில்சில் 20 குடியிருப்புகள்; புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூரில் 6 குடியிருப்புகள்; தேனி மாவட்டம் – ஆண்டிபட்டியில் 3 குடியிருப்புகள்; திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூரில் 40 குடியிருப்புகள் மற்றும் ஆவடியில்

117 குடியிருப்புகள்; திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டையில் 15 குடியிருப்புகள்; தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடியில் 42 குடியிருப்புகள்; திருநெல்வேலி மாவட்டம் – மேலப்பாளையத்தில் 7 குடியிருப்புகள், சங்கரன்கோவிலில் 41 குடியிருப்புகள், சங்கரன்கோயில் தாலுக்காவில் 22 குடியிருப்புகள், சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிபவர்களுக்கு 2 குடியிருப்புகள், கடயநல்லூரில் 12 குடியிருப்புகள், புளியங்குடியில் 12 குடியிருப்புகள் மற்றும் மணிமுத்தாறு தமிழ்நாடு சிறப்பு காவல் 9ஆம் அணியினருக்கு 54 குடியிருப்புகள்; திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டையில் 71 குடியிருப்புகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சிறுகனூரில் 2 குடியிருப்புகள் மற்றும் காட்டுபுதூரில் 1 குடியிருப்பு; விழுப்புரம் மாவட்டம் – மைலத்தில் 21 குடியிருப்புகள் மற்றும் ஒலுக்கூரில் 18 குடியிருப்புகள், என மொத்தம் 66 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 1036 காவலர் குடியிருப்புகள்;

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்; திண்டுக்கல் மாவட்டம் – வேடச்சந்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம்; வேலூர் மாவட்டம் – காட்பாடியில் காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம்; நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உட்கோட்ட அலுவலகம்; சென்னை – ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் காவலர்கள் தங்கும் வசதிகளுடன் கூடிய கூடம் (Dormitory) மற்றும் அம்பத்தூர் மதுவிலக்கு மற்றும் அமலாக்க பிரிவு அலுவலகம்; தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி குற்றப்புலனாய்வு பிரிவு காவல் நிலையம், என மொத்தம் 6 கோடியே 79 லட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 9 இதர காவல்துறை கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் :  9.10.2012